1971 அக்டோபர் 21] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

As the hon. Member has used the expression '(R)', the House would be interested to know to which party he is referring to. What exactly is the expansion of the letter 'R' and we do not know it. There may be 'R' in Delhi but so far as Tamil Nadu is concerned, there is no 'R' as the D.M.K. is the ruling party. I would like to know whether it would be possible to elicit further information from the hon. Member, Thiru Kasiraman.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் இங்கு ரூலிங் கட்சியாக இல்லாவிட்டாலும் ரூலிங் கட்சியின் பக்கம் இருப்பவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெயரில் எதுவும் இல்லை. ரோஜா என்பதற்கு வேறு என்ன பெயர் வைத்தாலும் ரோஜா ரோஜா தான் என்று சொல்வதுபோல் பெயரைப் பற்றி நாம் ரொம்ப நேரம் அலட்டிக் கொள்ளக்கூடாது. பெயர் என்பது ஒரு அடையாளம்தான். அந்தந்த நேரத்திற்குத் தகுந்தமாதிரி பெயர் அமையலாம்.

5. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை நடைமுறை விதிகள் 6(1) விதியின்கீழ் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நான் நியமித்திருக்கிறேன் என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

(1) திரு. மா. வெ. கரிவேங்கடம்.
(2) திருமதி ஜோதி வெங்கடாசலம்.
(3) திரு. நா. வீராசாமி.
(4) திரு. நீ. அன்புச்செழியன்.
(5) திரு. என். கே. பழனிசாமி.
(6) திரு. எம். ஏ. லத்தீப்.

6 அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 23 (1)-ஐத் தள்ளிவைத்து அரசினர் அலுவலை எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 23 (1)-வது விதியைத் தள்ளி வைத்து இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே தங்கமணி : தலைவர் அவர்களே, இடைத் தேர்தலுக்குப் பிறகு நம் சட்டமன்றம் கூடுவது இது மூன்றாவது தடவையாகும். முதல் தொடரில் நமக்கு நான்-அஃபிஷியல் டே என்பது இல்லாமல் போய்விட்டது. காரணம் அப்பொழுது